DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.383 / 2023 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 5 |
| Name | : டாக்டர். ராஜா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.03.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விருதுநகர், மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 28.05.2022ம் தேதி நான் மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது ராஜாங்கம் என்பவர் மனைவி சீனியம்மாள், 77 வயது அவர் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக தீக்காயப்பிரிவில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் இடது தோள்பட்டை, இடது மேல்கை, இடது பின்புறங்கள், சுடு காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவருக்கு சிகிச்சையளித்தேன். அவருக்கு 15 சதவீதம் சுடுகாயம் இருந்தது. அவரது காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்டவருக்கு தனது மருமகளால் சுடுதண்ணீர் ஊற்றியதால் காயம்பட்டதாக தெரிவித்துள்ளார். சுடுதண்ணீர் ஊற்றும்போது அந்த இடங்களில்

தோல்கள் உரிந்திருக்கும் என்றால் சூட்டின் தன்மை பொருத்து கொப்பளமாகவோ, தோல் உரிவதற்கோ வாய்ப்பு உண்டு. காயத்தின் விழுக்காடு எவ்வளவு என்றால் 15 சதவீதம் ஆகும். காயத்தின் அளவு இரண்டாம் நிலை தீக்காயம். மேற்படி காயங்கள் வட்ட வடிவில் இருந்ததா என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. எக்ஸ்ரே எடுக்கவில்லை. சிகிச்சையளித்தால் தோல் மீண்டும் வருவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் சில இடங்களில் காயம் சரியாகும், சில இடங்களில் தோல் ஒட்டி அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். காயம்பட்டவருக்கு அறுவை சிகிச்சை செய்தேனா என்றல் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைத்தோம், காயம்பட்டவர் சிகிச்சை அறுவை சிகிச்சை வேண்டாம் என சொன்னதால் விடுவிக்கப்பட்டார். முதுகின் பின்புறமும், பின்புட்டத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என பரிந்துரைத்தேன். நான் பரிசோதனை செய்யும்போது காயம்பட்டவருக்கு சுடுதண்ணீர் பட்ட இடத்தில் உருவத்தின் தன்மையை மாற்றியது போல் இருந்ததா என்றால் இருந்தது. காயம்பட்டவர் தடுமாறி சோறு சமைக்கும்போது அதில் விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உண்டு.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.